


Vol.29 | No. 6 | June
2025 The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



"I am a son of Saint Augustine, an Augustinian, who said, 'For you I am a bishop, with you, I am a Christian.' In this sense we can all walk together toward that homeland that God has prepared."

POPE LEO XIV





**2025 MAY 5**

Blessing of Chapel
Chenamcode FCC Convent



**2025 MAY 7**

Blessing of Chapel
Kalluvilai



**2025 MAY 4**

Blessing of St.Michael’s Church, Thettivilai





கடந்த 12 ஆண்டுகளாக இறையருள் மாத இதழின் பொறுப்பு ஆசிரியராக சிறந்த முறையில் வழி நடத்திய அருள் முனைவர் ஜோசப் சந்தோஷ் அவர்களுக்கு இறையருள் ஆசிரியர் மற்றும் குழுமம் சார்பில் மனமார்ந்த நன்றிகள்....

மேலும், கடந்த ஓராண்டாக இணை ஆசிரியர் பொறுப்பில் பணி புரிந்த அருட்பணி. ஆண்டனி தகடியல் அவர்களுக்கும் நன்றிகள்...

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 29 No :6 JUNE 2025



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...

## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Thomas Kuzhikodil**

Associate Editors

**Fr. Thomas Sathianesan**

**Mr. S.M.Edwinson**

**Mr. Iyathurai**

Published by:

**Fr. Thomas Kuzhikodil**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:

**Mary Jency V.M**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| மறைக்கல்வி | 09 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 12 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 13 |
| இல்வாழ்வு இயக்கம் | 15 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 19 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 21 |
| மறைமாவட்ட செய்திகள் | 22 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 26 |
| மறைவட்ட செய்திகள் | 24 |
| தென்காசி மறைத்தள செய்திகள் | 34 |
| MONTHLY AGENDA - JUNE 2025 | 36 |
| BISHOP'S ENGAGEMENTS - JUNE 2025 | 39 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/170/2025** **31 May 2025**

**Dear Readers,**

Greetings and prayerful wishes from Bishop's House, Thuckalay!

It is with immense joy and profound gratitude to Almighty God that I write to you today concerning the historic election of His Holiness Pope Leo XIV as the successor of Saint Peter and the visible head of the universal Catholic Church. As we witness this momentous occasion in the life of our Church, I invite you to join me in reflecting upon the significance of this papal election and the remarkable journey that has led Cardinal Robert Francis Prevost of the United States to the Chair of Peter as the first American pontiff in the Church's 2,000-year history.

The white smoke that rose from the Sistine Chapel on 8 May 2025 announced to the world that the College of Cardinals had chosen a new Supreme Pontiff. When Cardinal Prevost stepped onto the central loggia of Saint Peter's Basilica and was presented to the faithful as Pope Leo XIV, the universal Church received not merely a new administrator but a pastor whose life had been marked by deep spirituality, pastoral sensitivity, and unwavering commitment to the Gospel of Jesus Christ. On 29 May 2025, I had the singular privilege of interacting with our Holy Father at the Vatican, presenting our Eparchy to him for his paternal blessing.

**Life of Pope Leo XIV**

His Holiness Pope Leo XIV was born Robert Francis Prevost on 14 September 1955, at Mercy Hospital in the Bronzeville neighbourhood of Chicago, Illinois, on the city's South Side. Prevost has two older brothers, Louis Martín and John Joseph, and is of African, French, Italian, and Spanish descent. His father, Louis Marius Prevost, was of French and Italian descent, and his mother, Mildred Martínez, was of Spanish descent. According to those who knew the family, the Prevosts were devout Catholics who never missed church and were actively involved within their parish.

Young Robert grew up in the southern suburbs of Dolton, where his family's deep Catholic faith profoundly shaped his early formation. The seeds of his religious vocation were nurtured in this environment of authentic piety and devotion to the Church. His multicultural heritage, reflecting the rich diversity of American Catholicism, would later serve him well in his ministry to diverse communities worldwide.

Robert graduated from Villanova University in Pennsylvania with a degree in mathematics, then studied theology at the Catholic Theological Union of Chicago, where he earned a Master's of Divinity. Leo entered the novitiate of the Order of Saint Augustine in the province of Our Lady of Good Counsel, in Saint Louis, in 1977. At the age of 27, he was sent to Rome to study, and he was ordained as a priest in 1982. He went on to earn a doctorate in canon law from the Pontifical College of St Thomas Aquinas in Rome.

The academic formation of our Holy Father reflected both intellectual rigour and practical pastoral preparation. The Augustinian charism, with its emphasis on community life, scholarly pursuit, and pastoral care, would deeply influence his approach to ministry throughout his priestly and episcopal career. A seminary classmate described him as "very calm, but extremely intelligent, and extremely compassionate," noting that "he is not a showboat" but rather demonstrates understated competence and genuine humility.

**A Missionary in Peru**

What distinguishes Pope Leo XIV's formation from many of his predecessors is his extensive missionary experience in Latin America. As an Augustinian priest, Robert worked for a decade in Trujillo, Peru, and was later appointed bishop of Chiclayo, another Peruvian city, where he served from 2014 to 2023. His work in Peru was so significant that he became known in Rome as the "Latin Yankee" for the decades he spent ministering to the dispossessed and marginalised.

Robert is a dual citizen of the United States and Peru. The American-born pontiff obtained Peruvian citizenship in August 2015. This decision to become a Peruvian citizen reflects his deep commitment to the people he served and his understanding that effective pastoral ministry requires genuine incarnation in the local culture and community.

In 1999, Robert was elected Provincial Prior of the Augustinian Province

of “Mother of Good Counsel” in Chicago. Two and a half years later, the ordinary General Chapter of the Order of Saint Augustine elected him as Prior General, confirming him in 2007 for a second term. The new pontiff used his first remarks to say he is a son of St Augustine, and he quoted the saint’s famous phrase: “For you, I am a bishop, with you, after all, I am a Christian.”

**Episcopal Ministry and Vatican Service**

In October 2013, Robert returned to his Augustinian Province in Chicago, serving as director of formation at the Saint Augustine Convent, first councillor, and provincial vicar—roles he held until Pope Francis appointed him on 3 November 2014, as Apostolic Administrator of the Peruvian Diocese of Chiclayo, elevating him to the episcopal dignity as Titular Bishop of Sufar.

Bishop Robert entered the Diocese on 7 November, in the presence of Apostolic Nuncio James Patrick Green, who ordained him Bishop just over a month later, on 12 December, the Feast of Our Lady of Guadalupe, in the Cathedral of Saint Mary. On 26 September 2015, he was appointed Bishop of Chiclayo by Pope Francis.

As Bishop of Chiclayo, Cardinal Prevost demonstrated exceptional pastoral leadership in a diocese that served approximately half a million people in northern Peru. His episcopal ministry was characterised by special attention to the poor and marginalised, reflecting the Church’s preferential option for those on the peripheries. In March 2018, he was elected second vice president of the Peruvian Episcopal Conference, where he also served as a member of the Economic Council and as president of the Commission for Culture and Education.

In 2019, Pope Francis appointed Bishop Robert a member of the Congregation for the Clergy (13 July 2019), and in 2020, a member of the Congregation for Bishops (12 November). Meanwhile, on 15 April 2020, he was also appointed Apostolic Administrator of the Peruvian Diocese of Callao.

**Cardinal and Prefect of the Dicastery for Bishops**

Pope Francis’s confidence in Cardinal Robert’s abilities led to his appointment to one of the most important positions in the Vatican. On 30 January 2023, the Pope appointed Robert to be the prefect of the Dicastery for Bishops, which is responsible for evaluating bishop

candidates and making recommendations for new appointments. He also served as the president of the Pontifical Commission for Latin America. This role positioned him at the heart of the Church's governance, as the Dicastery for Bishops is responsible for the selection and appointment of bishops worldwide, except in those territories under the jurisdiction of the Congregation for the Oriental Churches and the Congregation for the Evangelisation of Peoples. He was also promoted to the rank of Archbishop.

Pope Francis created Bishop Robert a Cardinal in the Consistory of 30 September 2023 and assigned him the Diaconate of Saint Monica. The choice of Saint Monica as his titular church was particularly fitting, as she was the mother of Saint Augustine and a model of persistent prayer and maternal care for the Church.

As head of the Dicastery, Cardinal Robert participated in the Pope's most recent Apostolic Journeys and in both the first and second sessions of the 16th Ordinary General Assembly of the Synod of Bishops on synodality, held in Rome from 4 October to 29 October 2023, and from 2 October to 27 October 2024, respectively.

**The Papal Election and the Significance of Leo XIV**

Cardinal Robert Prevost was elected pope on 8 May 2025, the second day of the conclave, on the fourth ballot. The 133 cardinals gathered in a secret conclave in Rome to elect a new pope for the Catholic Church following the death of Pope Francis on 21 April. Leo was chosen just two days after a group of 133 cardinals gathered in conclave to select a new pontiff, suggesting that he quickly impressed his peers during the secretive process.

The speed of Cardinal Prevost's election suggests that the College of Cardinals recognised in him the qualities needed to lead the universal Church in our contemporary context. In pre-conclave speculation, Prevost was considered a dark horse compared to more prominent papabile. However, he was noted to be an ally of Pope Francis and a possible compromise candidate.

The last Pope to take the name Leo, Pope Leo XIII, was a Pope who stood in solidarity with the poor and advocated for the rights of workers. Leo XIII, who served as Pope from 1878 to 1903, placed a strong emphasis on workers' rights and Catholic social doctrine; therefore, the

choice of that name for the new pontiff makes a significant statement. His papal name was inspired by Pope Leo XIII, who developed modern Catholic social teaching amid the Second Industrial Revolution. Leo XIV believes the ongoing Fourth Industrial Revolution, particularly advances in artificial intelligence and robotics, poses "new challenges for the defence of human dignity, justice, and labour."

**Pastoral Style and Vision**

As the new Pope addressed the crowds in St Peter's Square, Leo paid tribute to the late pontiff Francis, urging them to remember the late pope's legacy of unity before outlining his vision for the Catholic Church. "We have to seek together to be a missionary Church. A Church that builds bridges and dialogue," he said.

In some ways, Leo follows the mould of Pope Francis, who died last month at 88. He has long espoused a commitment to social justice issues, and two years ago, he described his vision for the Church, with goals of "reaching out to the poor, to the neediest, to those on the margins" — in language mirroring that of Francis.

Pope Leo aligns with Francis on the direction of the church and the process to foster a more inclusive global church, but he is expected to lead as his own person. Leo is expected to lean more progressive on social issues, such as migration and poverty, but fall more in line with moderates on moral issues related to Catholic doctrine.

Pope Leo XIV's approach to liturgy also reflects his deep respect for tradition combined with pastoral sensitivity. During his service in Peru, Prevost was described as an "impeccable dresser" when it came to celebrating the Mass, wearing full vestments even when summer temperatures rose above 85°F in Chiclayo. In August 2024, speaking to a Chicago-area parish, Prevost stated that "liturgy needs to be beautiful to help us, to strengthen us in our faith."

**Significance for the Syro-Malabar Church**

The election of Pope Leo XIV holds particular significance for us as clergy of the Syro-Malabar Church. A citizen of the United States by birth, Leo XIV is the first pope to have been born in North America, the first to hold Peruvian citizenship (having been naturalised in 2015), the second Pope from the Americas (after his predecessor Francis), and the first from the Order of Saint Augustine.

Pope's experience as a missionary in Peru, where he learned to adapt his ministry to local cultures while maintaining doctrinal fidelity, offers valuable insights for our apostolic work. As Eastern Catholics, we must also navigate the tension between preserving our rich liturgical and theological traditions and engaging effectively with contemporary pastoral challenges.

Pope Leo XIV's emphasis on the beauty of liturgy resonates deeply with our Eastern Catholic understanding of worship as a participation in the heavenly liturgy. His careful attention to liturgical detail and reverent celebration of the sacred mysteries should inspire us to approach our celebration of the Divine Liturgy with renewed devotion and a keen eye for beauty.

The Holy Father's commitment to serving the poor and marginalised challenges us to examine our pastoral priorities. Are we truly reaching out to those on the peripheries of our communities? Are we building bridges of dialogue and understanding with those who have drifted away from the Church?

**A Call to Renewed Pastoral Commitment**

As we welcome Pope Leo XIV to the Chair of Peter, let us renew our commitment to the pastoral mission of the Church. Pope Leo is a member of the Augustinian religious order, which is spread across the world. He led the order for more than a decade as its prior general. His experience in religious life reminds us that effective pastoral ministry requires both contemplative depth and active engagement with the world.

I encourage each of you to study the pastoral approach of our new Holy Father, particularly his ability to combine fidelity to Catholic teaching with pastoral sensitivity and cultural adaptation. His years of missionary work demonstrate that authentic inculturation does not compromise doctrinal integrity but rather helps the Gospel message take root more deeply in human hearts.

Let us also pray for the success of Pope Leo XIV's pontificate, especially as he faces the challenges of leading the Church in an increasingly complex global context.

As priests of the Syro-Malabar Church, our communion with the Bishop of Rome is not merely a canonical requirement but a profound

expression of the unity of the Catholic Church. Pope Leo XIV's election reminds us that this unity transcends cultural, national, and even ritual boundaries. The fact that an American missionary who spent decades in Peru can now lead the universal Church demonstrates the truly Catholic nature of our faith.

The new Pope's voting records indicate that he has actively participated in American democratic processes, having voted in the 2024 general election, as well as in the 2012, 2008, 2004, and 2000 cycles. This civic engagement, combined with his international pastoral experience, positions him well to address the complex relationship between faith and public life in our contemporary world.

We must support the Holy Father not only through our prayers but also through our faithful implementation of his pastoral guidance and our witness to the unity that characterises the Catholic Church. Our own liturgical and spiritual traditions are enriched when they are lived in communion with the wider Church under the leadership of the successor of Peter.

**CONCLUSION**

As we conclude the month dedicated to Our Blessed Mother, we now enter the month dedicated to the Heart of Jesus. Devotion to the Sacred Heart of Jesus is a devotion to Jesus Christ Himself, but in the particular ways of meditating on His interior life and on His threefold love – His divine love, His burning love thatfed His human will, and His sensible love that affects His interior life. It is a symbol of that divine love which he shared with the Father and the Holy Spirit, but which he, the Word made Flesh, alone manifests through a weak and perishable body, since "in Him dwells the fullness of the Godhead bodily." Let us inculcate devotion to the Heart of Jesus among our people in ways that are possible during these times of the pandemic. May the Heart of Jesus forgive the sins of humanity and bring an end to this end that has devastated the world!

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

† George Rajendran SDB

Bishop of Thuckalay




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

**"நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன. (உரோ 10:15)"**

## விசுவாச பயிற்சி விழா 2025

மறைமாவட்ட மறைக்கல்வி நிலையங்களின் விசுவாச பயிற்சி விழா ஏப்ரல் 27 முதல் மே 14 வரை உள்ள நாட்களில் அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

## போட்டித் தேர்வு

மூன்றாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கான போட்டித்தேர்வு மே 18 ஞாயிற்றுக்கிழமை படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்துக்கு உட்பட்ட அரங்கில் வைத்து பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி வரை நடைபெற்றது. பங்களவில் நடைபெற்ற தேர்வில் 70 க்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்கள் மொத்தம் 225 பேர் இப்போட்டிகளில் பங்கு பெற்றனர்.

## மறைமாவட்ட மறைக்கல்வி மாணவர்களுக்கான உள்ளிருப்பு முகாம்

மே 20, 21, 22 ஆகிய 3 நாட்களில் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி அரங்கில் வைத்து நுடைபெற்றது. அதனுடைய துவக்க விழா மே 20 செவ்வாய்க்கிழமை பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்களின்



தலைமையில் இயக்குநர் தந்தை அபிலாஷ் சேவியர் மற்றும் அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்களின் முன்னிலையில் இறைவணக்கப் பாடல் மற்றும் செபத்துடன் ஆரம்பமானது. இயக்குநர் தந்தை அவர்கள் வருகை தந்த மாணவர்களையும் அருட்தந்தையர்களையும், அருட்சகோதரிகள் மற்றும் ஆசிரியர்களை வரவேற்று உரை நிகழ்த்தினார். முதல் நாள் Christian Vision of Life என்ற தலைப்பில் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களும், Applying God's words in Life என்ற தலைப்பில் அருட்தந்தை அனில் ராஜ் அவர்களும், Divine Call என்ற தலைப்பில் அருட்தந்தை ஜோஸி குளத்துங்கல் அவர்களும், 2- வது நாள் Career Guidance என்ற தலைப்பில் திரு C. றசல் ராஜ் அவர்களும், 3 - வது நாள் Save your Souls என்ற தலைப்பில் முனைவர் திரு S. ஜாக்சன் அவர்களும், மிகச் சிறந்த முறையில் வகுப்புகள் நடத்தினார்கள். ஒவ்வொரு நாளும் காலை செபத்துடன் ஆரம்பமாகி திருப்பலி, செபமாலை, ஆராதனை வகுப்புகளும் நடைபெற்றது. மேலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வண்ணம் ஆடல் பாடல்கள் மற்றும் விளையாட்டுக்களும் நடைபெற்றது. இந்த 3 நாள் உள்ளிருப்பு முகாமை மிக சிறப்பாக முன்னின்று நடத்தியவர்கள்; அருட்சகோதரர் காட்வின் மற்றும் அருட்சகோதரர் ஸ்ரீஜித் ஆவர்.

## யூபிலி கொண்டாட்டம் மற்றும் புதிய மறைக்கல்வி ஆண்டு துவக்க விழா

மறைமாவட்ட மறைக்கல்வி ஆசிரியர்களின் யூபிலி கொண்டாட்டம் மே 31 சனிக்கிழமை கல்லுவிளை ஆசீர் அரங்கில் வைத்து காலை 9.30 முதல் மாலை 4.00 மணி வரை நடைபெற்றது. தொடர்ந்து "திருமணம்" என்ற திருவருட்சாதனத்தை குறித்து பிலாங்காலை மறைவட்ட அளவில் சிறுமலர் மறைக்கல்வி நிலைய ஆசிரியர்களும், "குருத்துவம்" என்ற திருவருட்சாதனத்தை குறித்து சூசைபுரம் மறைவட்ட அளவில் புனித ஜோசப் மறைக்கல்வி நிலைய ஆசிரியர்களும், "நற்கருணை" என்ற திருவருட்சாதனத்தை குறித்து களியல் மறைவட்ட அளவில் காரோடு புனித ஜோசப் மறைக்கல்வி நிலைய ஆசிரியர்களும், களியல் புனித. மேரி மறைக்கல்வி நிலைய ஆசிரியர்களும் மிகச் சிறந்த முறையில் Video Editing and Powerpoint presentation அளித்தார்கள். தொடர்ந்து தேவ மாதா மறைக்கல்வி நிலைய ஆசிரியர்களின் குழுப்பாடலும் தேனீர் இடைவேளைக்குப்பின் அருட்தந்தை வய்சிலின் சேவியர் அவர்கள் மறைக்கல்வியைப் பற்றிய மிகச்சிறப்பான வகுப்பும் நடைபெற்றது. உணவு இடைவேளைக்குப்பின் தொடர்ந்து 1.45 மணிக்கு இயக்குநர் தந்தை அவர்களின்

தலைமையில் மறைக்கல்வி ஆசிரியர்கள் அனைவரும் பங்கு கொள்ள யூபிலி



விவிலியப்பவனி சீனாய் தியான இல்லத்திலிருந்து துவங்கி ஆசீர் அரங்கு வரை நடைபெற்றது. தொடர்ந்து 2025 - 2026 ஆம் மறைக்கல்வி ஆண்டு துவக்க விழா பிற்பகல் 2.15 மணிக்கு ஆசீர் அரங்கில் வைத்து மறைவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்து பறம்பில் அவர்களின் தலைமையிலும், சிறப்பு விருந்தினர் அருட்தந்தை ஆன்றணி தரக்குந்நேல் அருட்தந்தை டோஜி அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. ஆறுகாணி திருக்குடும்ப மறைக்கல்வி நிலைய மாணவிகளின் இறைவணக்க நடனம் மற்றும் பரைக்கோடு மறைக்கல்வி நிலைய ஆசிரியர்களின் விவிலியம் வாசித்தல் மற்றும் செபத்துடன் ஆரம்பமானது. இயக்குநர் தந்தை அவர்கள் வருகை தந்த அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். தொடர்ந்து அனைத்து மறைக்கல்வி நிலைய தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்க, நமது குருகுல முதல்வர் பேரருட்தந்தை. தோமஸ். பௌவ்வத்து பறம்பில் அவர்கள் தலைமையேற்று குத்து விளக்கேற்றி புதிய மறைக்கல்வி ஆண்டை துவங்கி வைத்தார். தொடர்ந்து குருகுல முதல்வர் அவர்களும் அருட்தந்தையர்களும் தலைமையாசிரியர்களும் ஆசிரியர்களும் எரியும் மெழுகுவர்த்தி கையில் ஏந்தி மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான வழிபாட்டு நிகழ்வு மற்றும் உறுதிமொழியும் நடைபெற்றது. விழாவின் இடையிடையே புனித மிக்கேல் மறைக்கல்வி நிலைய மாணவர்களின் குழுப்பாடலும், மாலைக்கோடு மறைக்கல்வி நிலைய மாணவிகளின் குழுநடனமும், பிலாங்காலை மறைக்கல்வி நிலைய ஆசிரியர்களின் குழுப்பாடலும் கண்களுக்கு விருந்தளிக்கும் வண்ணமாய் அமைந்தது. இவ்விழாவின்போது, திருமணம் என்ற திருவருட்சாதனத்தை பற்றி மிகச் சிறந்த முறையில் Video Editing and Powerpoint presentation செய்த பிலாங்காலை மறைவட்ட சிறு மலர் மறைக்கல்வி நிலைய ஆசிரியர்களுக்கு முதல் பரிசாக ரு 10.000 பரிசுத்தொகையும், ஆறுதல் பரிசாக குருத்துவம்

என்ற திருவருட்சாதனத்தை குறித்து presentation செய்த சூசைபுரம் மறைவட்டத்திற்கும் "நற்கருணை" என்ற திருவருட்சாதனத்தை குறித்து presentation செய்த களியல் மறைவட்டத்திற்கும் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்து பறம்பில் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

பின் ஊக்குவிப்பாளர் திரு விஜயராஜன் அவர்களின் நன்றியுரையுடன் துவக்கவிழா இனிதே முடிவுற்றது.

**பங்களவில் மறைக்கல்வி ஆண்டின் தொடக்கம்**

2025 -2026 ஆம் மறைக்கல்வி ஆண்டு துவக்க விழா மற்றும் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான வழிபாட்டு நிகழ்வுடன் ஜுன் 1 ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் தொடங்கப்பட்டது.

***அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்ற***
***இணை இயக்குனர்***

***அருட்தந்தை அபிலாஷ் சேவியர்***
***இயக்குனர்***

---

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

---

**கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை ( லூக் 1:37)**

2025 ஆண்டின் குழந்தை இயேசு இயக்கத்தின் தொடக்க விழா மே 05, சனிக்கிழமை மதியம் 2.00 மணியளவில் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்கள் துவக்க உரையாற்றி தொடங்கி வைத்தார். சிறப்பு விருந்தினர் அருட்தந்தை ஆன்டணி தரக்குந்நேல் அவர்கள் சிறப்புறையாற்றினார். இந்த வருட புனிதர் St. Jose Sanchez Del Rio அவர்களை தேர்வு செய்து, இயக்குநர் அவர்கள் அறிமுகம் செய்தார்கள். மறைவட்ட ஊக்குவிப்பாளர் அனைவருக்கும் நன்றியும், வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டது. இடம் மாறுதலாகி சென்ற ஊக்குவிப்பாளர்களுக்குப் பதிலாக புதிய ஊக்குவிப்பாளர் தேர்வு செய்யப்பட்டு, பொறுப்பேற்றுக் கொண்டனர்.

ஜுன் 22, ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.00 மணிக்கு கல்லுவிளை ஆசீர் அரங்கில் வைத்து, குழந்தைகளுக்கான கிறிஸ்து பூபிலி ஆண்டுவிழா மற்றும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும். இதில் அனைத்து குழந்தைகளும், பொறுப்பாளர்களும் பங்கேற்க வேண்டும்.

இயக்குநர்,

அருட்தந்தை டோஜி கொழுவக்கண்டத்தில்

## சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

### வேலைவாய்ப்பு முகாம்

2025 மே 16, காலை 10.00 மணியளவில் SMYM அலுவலகம் கல்லுவிளையில் வைத்து இளையோர் இயக்கம் மற்றும் Palmyra food & Beverages சார்பாக வேலைவாய்ப்பு முகம் நடத்தப்பட்டது. இம்முகாமில் சுமார் 10 பேர் கலந்து கொண்டனர். செல்வன் அஜித் (Marketing Head) அவர்கள் இதற்கு தலைமை தாக்கினார்.



### நன்றி நவில்தல் விழா

நமது இளையோர் இயக்கத்தின் இயக்குநர் பாசமிகு பேரருட்தந்தை Dr. ஜோசப் சந்தோஷ் அவர்கள் மற்றும் இணை இயக்குநர் அருட்தந்தை லின்டோ அவர்களும், அடுத்த கட்ட பணிக்காக செல்லவிருப்பதால், இளையோர் இயக்கத்தின் சார்பாக மே 18ஆம் தேதி பிரியாவிடை நிகழ்வு நடைபெற்றது. மாலை 5 மணியளவில் இறை வணக்கப் பாடலுடன் இந்நிகழ்வு ஆரம்பமானது. இயக்கத்தின் ஊக்குவிப்பாளர் திரு ஜினோ அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார்கள். தொடர்ந்து இளையோர் இயக்கத்தின் ஊக்குவிப்பாளர் அருட்சகோதரி எலைசா அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். அதை தொடர்ந்து, இயக்கத்தின் ஆலோசகர் செல்வன் அஜித் அவர்கள், தந்தை அவர்களை வாழ்த்தி பேசினார். இயக்குநர் தந்தையின் வாழ்வில் நடந்த சில விஷயங்களை

விளையாட்டு வடிவில் கலந்துரையாடப்பட்டது. அதற்கு நடுவராக தந்தை அவர்கள் அமர்ந்திருந்தார். தொடர்ந்து தந்தை அவர்கள் 12 வருடமாக இளையோரை எவ்வாறு வழி நடத்தினார் என்பதை பகிர்ந்து கொண்டார். இளையோர்கள்: இயக்குநர் தந்தையோடு பயணித்த சில அழகான நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். தொடர்ந்து, மாங்கரை அலகை சார்ந்த இளையோர்கள் நடனமாடி மகிழ்வித்தனர். நிகழ்வில் தந்தை அவர்களின் வீடியோ தொகுப்பை ஒளியிடப்பட்டது. நன்றியுரையைத் தொடர்ந்து, இயக்குநர் தந்தை அவர்களுக்கு



நினைவு பரிசு வழங்கப்பட்டது. அதன் பின் கலை நிகழ்வுகள் மற்றும் இரவுணவுடன் இவ்விழா இனிதே நிறைவுற்றது.

**செயலர்,**
**செல்வி ஜினோ**

| FEASTDAYS OF REV. FATHERS - JUNE 2025 | |
|---|---|
| FR. JUSTIN SUTHEESH | 01 |
| FR. ANONY CHUNDELIKKATT | 13 |
| FR. ANTONY JOSE | 13 |
| FR. ANTONY MADAPPURACKAL | 13 |
| FR. ANTONY MAHESH | 13 |
| FR. LINTO THAKIDIEL | 13 |
| FR. SUNIL ANTONY | 13 |
| FR. JOGESH JOSEPH | 24 |
| FR. PETER KIZHAKKAYIL | 29 |

# இல்வாழ்வு இயக்கம்
## தக்கலை மறைமாவட்டம்



ஒவ்வொரு மாதமும் முதல் மற்றும் மூன்றாவது திங்கள் Dr. Robin அவர்கள் இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வருகை தந்து மனநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்து வழங்கி வருகிறார்.

மே 16 முதல் 18 வரை திருமண ஆயத்த பயிற்சி வகுப்பும் இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் நடைபெற்றது.

### ஆண்டு விழா



மே 11, மாதர் ஜோதிஸ் ஆண்டு விழா படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலய அரங்கத்தில் வைத்து நடைபெற்றது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில், தலைமை பீடம் அலங்கரிக்க சீரோ மலபார் குளோபல் மாதர் ஜோதிஸ் தலைவர் திருமதி. பீனா ஜோஷி அவர்களும்

வழக்கறிஞர் திருமதி. சுமித்திரா அவர்களும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். அனைத்து மறைவட்ட இயக்குநர் தந்தையர்களும், பல அருட்தந்தையர்களும் மற்றும் அருட்சகோதரிகளும் இவ்விழாவிற்கு வருகை தந்தனர். இந்த வருடம் சிறந்த மறைவட்ட இயக்குநர் விருது மஞ்சாலுமூடு மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்களுக்கு



வழங்கப்பட்டது. சிறந்த அலகு விருது புனித தோமையர் ஆலயம் முழுக்கோடுக்கு வழங்கப்பட்டது.

அறுபது குடும்பங்களுக்கு கீழ் உள்ள சிறந்த அலகு விருது கிறிஸ்து அரசர் ஆலயம், பரைக்கோடு ஆலயத்திற்கும் வழங்கப்பட்டது. ஆண்டு விழாவிற்கு சுமார் 500 தாய்மார்கள் கலந்து கொண்டனர். ஆண்டு விழா நிகழ்சிகள் அனைத்தும் மறைமாவட்ட இயக்குநர் தந்தை தலைமையில் நடைபெற்றது. ஒவ்வொரு மறைவட்டங்களிலிருந்தும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. கலை நிகழ்ச்சிகளுக்கு சுமார் 100 தாய்மார்கள் பங்கேற்றனர். பங்கேற்ற தாய்மார்களுக்கும் சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட்டன. ஒருவருடம் நடைபெற்ற போட்டிகளுக்கான பரிசுகள் வழங்கப்பட்டன. அனைத்து போட்டிகளுக்கும் சேர்த்து பரிசுகள் சுமார் 1500 வழங்கப்பட்டன.

மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் உறுப்பினர்கள் திருவிவிலியம் எழுதி சமர்ப்பித்தது மற்றும் திறன் வளர் போட்டியில் சமர்ப்பித்த கைவினை பொருட்கள் அனைத்தும்



பார்ப்பதற்கு காட்சிப்படுத்தப்பட்டன.

விழாவிற்கு வருகை தந்த அனைவரும் வரவேற்பு குளிர்பானம் மற்றும் தேநீர் வழங்கப்பட்டது. கலைநிகழ்ச்சிகள் அனைத்தும் மறைவட்டம் வாரியாக இணைந்து நடத்தப்பட்டது.

## புத்தக வெளியீட்டு விழா

### அன்னையின் திருமுகங்கள்

ஆண்டுவிழாவின் போது இயக்குநர் தந்தை அவர்கள் தலைமையில் 365 நாட்களுக்கான அன்னையின் திருமுகங்கள் என்ற புத்தகம் வெளியிடப்பட்டது.

**இந்த வருடத்திற்கான உறுப்பினர்களின் பதிவு கட்டணம் செலுத்திய ஆலயங்களின் விவரம் பின்வருமாறு.**

| S.NO | NAME OF PARISH AND PLACE |
|---|---|
| | **FORANE – KALIYAL** |
| 1 | ST. JOSEPH CHURCH KARODE |
| 2 | LOURTHU MATHA CHURCH CHENAMCODE |
| 3 | SACRED HEART CHURCH PALLIKONAM |
| 4 | ST MARY'S CHURCH KALIYAL |
| | **FORANE – MANJALUMOODU** |
| 1 | HOLY CROSS CHURCH MALICODE |
| 2 | ST LITTLE FLOWER CHURCH MANJALUMOODU |
| 3 | HOLY FAMILY CHURCH MUKKOOTUKAL |
| | **FORANE – PADANTHALUMOODU** |
| 1 | ST MARIA GORETTI CHURCH ATHENCODE |
| 2 | ST MATHEW'S CHURCH ANNIKARAI |
| 3 | ST MARTIN DE PORES CHURCH KAZHUVANTHITTAI |
| 4 | SACRED HEART CHURCH PADANTHALUMOODU |
| 5 | ST PAUL'S CHURCH THETTIODE |
| | **FORANE – NITHIRAVILAI** |
| 1 | ST ANTONY'S CHURCH VAYALINKARAI |
| 2 | ST GEORGE SHRINE CHURCH MUNCHIRAI |
| 3 | JAYA MATHA CHURCH NITHIRAVILAI |
| 4 | ST XAVIER'S CHURCH VARUTHATTU |
| 5 | CHRIST THE KING CHURCH CHRISTURAJAPURAM |
| 6 | AMALA MARIA CHURCH CHEENIVILAI |
| | **FORANE – SOOSAIPURAM** |
| 1 | ST JAMES CHURCH MANKARAI |

| | |
|---|---|
| 2 | CHRIST THE KING CHURCH PALAPALLAM |
| 3 | HOLY FAMILY CHURCH THAKALIVILAI |
| 4 | ST JOSEPH'S CHURCH SOOSIPURAM |
| 5 | LORETTO MATHA CHURCH PILANKARAI |
| 6 | FATHIMA MATHA CHURCH FATHIMAPURAM |
| **FORANE – THUCKALAY – PILANKALAI** | |
| 1 | ST XAVIER'S CHURCH KAISALAVILAI |
| 2 | ST LITTLE FLOWER CHURCH PILANKALAI |
| 3 | CHRIST THE KING CHURCH PARAICODE |
| **FORANE – ARUKANI** | |
| 1 | ST THOMAS CHURCH NETTA |
| 2 | HOLY FAMILY CHURCH ARUKANI |
| 3 | ST FRANCIS ASSISI CHURCH MEZHACODE |
| 4 | ST THOMAS CHUCH PATHUKANI |

## சீரோ மலபார் குளோபல் மாதர் ஜோதிஸ் ஜெபமாலை

ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வெள்ளிக்கிழமையில் சீரோமலபார் குளோபல் மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் பொறுபாளர்களால் நடத்தப்படும் online ஜெபமாலையில் மே மாதம் 16 ம் தேதி நம் தக்கலை மறைமாவட்ட மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் மறைமாவட்ட பொறுப்பாளர்கள் இயக்குநர் தந்தையின் ஆரம்ப ஜெபத்துடன் ஜெபமாலையை வழிநடத்தினார்கள்.

**இயக்குநர்**
**முனைவர். ஜிம்மி தெக்கேகடுமத்தில்**

## வரவிருக்கும் நிகழ்வுகள்

ஜூன் 12 - மறைபரப்பு பணியாளர்களின் யூபிலி - மதுரை

ஜூன் 14 - அருட்சகோதரிகளின் கிறிஸ்து ஜுபிலி - கல்லுவிளை

ஜூன் 16 - இளங்குருமடத்தில் புதிய கல்வியாண்டு துவக்கம்

ஜூன் 17 - அருட்தந்தையர்கள் கூட்டம்

ஜூன் 22 - குழந்தைகளின் ஜுபிலி (KII) - கல்லுவிளை

ஜூன் 27 - புதிய அருட்தந்தையர்கள் தினம் - காட்டாத்துறை

ஜூன் 29 - கைக்காரர்கள் மற்றும் கணக்கர்களுக்கான பயிற்சி

# கன்னியாகுமரி
# சமூக சேவை சங்கம்

## சுயஉதவிக்குழு (SHG) உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி

CTWWC திட்டத்தின் கீழ் சேவிளை, பாலபள்ளம் மற்றும் அன்னிக்கரை பகுதிகளில் மே மாதம் 26 மற்றும் 28 ஆகிய தேதிகளில் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. சமூகத்தில் பெண்களின் பங்கு மற்றும் குழந்தைகள் பாதுகாப்புக்கான அவர்களின் அவசியத்தைக் குறித்தும், குடும்ப உறவுகளின் ஆழமான தாக்கத்தைப் பற்றியும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.நிகழ்வில் SHG அமைப்புகள் எப்படி பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்துகின்றன, அவற்றின் மூலமாக குடும்பத்தின் நிதி நிலைத்தன்மையும், சமூக ஒற்றுமையும் வளர்கின்றன என்பதையும் விளக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெண்கள் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டதோடு, குழுவாக இணைந்து செயல்படும் போது ஏற்படும் மாற்றங்களை குறித்தும் எடுத்துக்காட்டினார்கள்.



விழிப்புணர்வு நிகழ்வின் முக்கிய அம்சமாக, குடும்பத்தின் அடிப்படை மதிப்புகள், பெற்றோர்களின் பங்கு, மற்றும் குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கு தேவையான உறவு சூழல் பற்றிய விவாதங்கள் இடம்பெற்றன. வழிகாட்டிகள் திறமையான பரிசீலனைகள் மூலம், திறந்த உரையாடலுக்கான வாய்ப்புகளை

ஏற்படுத்தினர். இதில் கலந்து கொண்ட SHG உறுப்பினர்கள் தங்களது குழந்தைகளுடன் எவ்வாறு நெருங்கிய உறவுகளை உருவாக்கலாம், குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்களை எவ்வாறு சமாதானமாக தீர்க்கலாம், குடும்ப உறுப்பினர்களிடையே இரக்கம், புரிதல், மற்றும் பரஸ்பர மரியாதையை எவ்வாறு வளர்த்துக் கொள்ளலாம் என்பதையும் உணர்ந்தனர்.



மேலும், நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, அரசு வழங்கும் நலத்திட்டங்கள், பெண்களுக்கான வாழ்வாதார பயிற்சிகள், மருத்துவ உதவிகள் மற்றும் கல்வி நிதி உதவிகள் பற்றிய விழிப்புணர்வும் வழங்கப்பட்டது. SHG குழு ஒரு சமூக ஆதரவு வளையமாக செயல்பட்டு, ஒவ்வொரு உறுப்பினரையும் தனி நபராக மட்டும் அல்ல, ஒரு சமூக மாற்றக் குழுவாகவும் உருவாக்குகின்றது என்பதை அனைவரும் புரிந்துகொண்டனர்.

இந்நிகழ்வு மூலம், பெண்கள் தங்களின் குடும்பம் மற்றும் சமூகத்தில் உள்ள பங்களிப்பை மீண்டும் ஒரு முறை உணர்ந்தனர். பலர் தாங்கள் பெற்ற அறிவுகளை வீட்டிலும் குழுவிலும் பின்பற்ற வேண்டும் என்று உறுதியூட்டினர். இந்நிகழ்வு SHG உறுப்பினர்களின் மனதில் நம்பிக்கை, ஒற்றுமை மற்றும் சமூகத்திற்கு பயனளிக்கும் சேவை செய்யும் உணர்வை ஊட்டியது.

***அருட்தந்தை மகேஷ்,***
***செயலர்***

# அருட்சகோதரர்களிடமிருந்து

ஏப்ரல் மாதம் 27 தேதி முதல் மே மாதம் 11 தேதி வரை அருட்சகோதரர்கள் மறைமாவட்டத்திற்கு உட்பட்ட பங்குகளுக்கு சென்று விசுவாச பயிற்சி விழா கொண்டாட்டங்களை வழிநடத்தினார்கள். அதனை தொடர்ந்து மே மாதம் 12 முதல் 16 வரை அருட்சகோதரர்கள் தங்கள் திறன்களை மேம்படுத்துவதற்கு மறைமாவட்டம் வாய்ப்பு ஏற்படுத்தியது. இது ஐந்து நாள் முகாமாக சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. இந்த முகாமை மறைமாவட்ட அருட்பணியாளர்கள் வழிநடத்தினார்கள். மேலும் இந்த நாட்களில் தமிழ் பயிற்சி வகுப்புகளும் நடைபெற்றது. அதன் பிறகு 17-ம் தேதி அருட்சகோதரர்கள் ஒரு நாள் சுற்றுலா சென்றனர். பின் அருட்சகோதரர்கள் விடுமுறைக்காக இல்லங்களுக்கு திரும்பினார்கள்.

**இப்படிக்கு**

**அருட்சகோதரர்கள் திவின் ராஜ் D S &டெபின்**

| BIRTHDAY OF REV. FATHERS - JUNE - 2025 | |
|---|---|
| FR. ANIL RAJ DOMINIC | 02 |
| FR. JOHNSILAL ARACKAPARAMPIL | 03 |
| FR. JUSTIN CHERUVELIL | 04 |
| FR. ABIN EETTICKAL MCBS | 07 |
| FR. TOJI KOZHUVAKANDATHIL | 07 |
| FR. MATHEW JUDIT CMI | 12 |
| FR. SUNIL ANTONY | 16 |
| FR. JOSEMON PAUL PURAYIDATHIKUNNEL | 19 |
| FR. SAJAN NETTAPONGHU | 21 |
| FR. MIJO PUTHENPURAIL | 25 |

# மறைமாவட்டச் செய்திகள்

## மறைமாவட்ட அருட்பணிப் பேரவை

ஏழாவது அருட்பணிப் பேரவையின் மூன்றாவது கூட்டம் 2025 மே 1 சங்கமத்தில் நடைபெற்றது. தொடக்க அமர்வு காலை 9:45 மணிக்கு செபத்துடன் தொடங்கியது. சபை உறுப்பினர்களில் ஒருவரான திரு. கிளிண்டன் அனைவரையும் வரவேற்றார் துணைச் செயலாளர் திரு. ஷோனிக் ரீகன் முந்தைய கூட்டத்தின் செயல்களை அறிக்கையாக சமர்பித்தார். மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி, தொடக்க உரையாற்றினார். பேரருட்தந்தை Dr. ஜோசப் சந்தோஷ் அவர்கள் ஐந்தாவது உயர் பேராய மாமன்றத்தில் வெளியிடப்பட்ட தீர்மானங்களில் முக்கிய புள்ளிகளை, சீரோ-மலபார் திருச்சபை ஆயர்கள் பேரவையின் பரிந்துரைகளை முன்வைத்தார். அதனை தொடர்ந்து, குழு உறுப்பினர்கள் தயாரிக்கப்பட்ட கேள்விகளின் அடிப்படையில் குழு விவாதங்களில் பங்கேற்றனர். முன்பு இருந்த ஏழு குழுக்களில் பங்கேற்ற உறுப்பினர்கள் தங்கள் பரிந்துரைகளை முன் வைத்தனர். ஒவ்வொரு குழுவின் செயலாளரும் திருஅவையின் செயல் திட்டத்தில் தனது முன்மொழிவுகளை சமர்ப்பித்தனர். வழிபாட்டு முறை, மறைக்கல்வி, இளையோர் இயக்கம், கல்வி, பொது நல்வாழ்வு மற்றும் மாதர் ஜோதிஸ் ஆகிய துறைகளில் கவனம் செலுத்தின. கூட்டத்தின் முடிவில், diploma at Sinai Theological முடித்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் விருதுகள் போரருட்தந்தை தாமஸ் பவத்துப்பரம்பில் தலைமையில் வழங்கப்பட்டு, 3:30 மணியளவில் கூட்டம் முடிவடைந்தது.

## ஆசிரியர்களுக்கான ஜூபிலி விழா மற்றும் ஆண்டு விழா

மறைமாவட்டத்தின் பள்ளி ஆசிரியர்களுக்கான கிறிஸ்து ஜூபிலி மற்றும் ஆண்டு விழா 2025 மே 30 ஆம் தேதி கல்லுவிளையில் உள்ள சீனாய் தியான மையத்தில் நடைபெற்றது. காலை அமர்வில், பாம்பன்விளை OFM உருவாக்க மையத்தின் இயக்குநர் அருட்தந்தை ஆன்டனி நெல்சன் அவர்கள் விழா உரையை நிகழ்த்தினார். அவர் ஒரு சிறந்த ஆசிரியரின் பண்புகள் மற்றும் மதிப்பீடுகளை குறித்தும், பெரும் ஆசானாகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை ஒப்பிட்டும் கூறினார். மதியத்திற்கு பிறகு கிறிஸ்து ஜூபிலி விழா ஒரு பொதுக் கூட்டமாக முன்னெடுக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு அருட்தந்தை தாமஸ் பௌவத்துபரம்பில் தலைமை தாங்கினார். அருட்சகோதரி ஜெஸ்ஸி தெரேசா CMC, அருட்சகோதரி செலியா FCC, மற்றும் அருட்சகோதரி ரோஸ் மார்ட்டின் SABS—மற்றும் CMI பிராந்திய மேற்பார்வையாளர் அருட்தந்தை மேத்யூ அரக்கலம் CMI ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். ஆசிரியர்கள், ஜூபிலி கருப்பொருளை மையமாகக் கொண்டு பாடல்கள் மற்றும் கலாசார நிகழ்ச்சிகளை வழங்கினர். இந்த நிகழ்வு மதியம் 4:00 மணியளவில் நிறைவுற்றது.

### சேனம்கோட்டில் புதிய ஆசிரமம் மந்திரிப்பு

கடந்த 25 ஆண்டுகளாக, சேனம்கோட்டில் உள்ள அசிசி வித்யாலயாவின் முதல் மாடியில் அசிசி FCC ஆசிரமம் செயல்பட்டு வந்தது. பள்ளியின் செயல்பாடுகள் குறுக்கீடு இல்லாமல் நடைபெறவும், சகோதரிகள் வாழ்வதற்காக ஏற்ற வசதிகள் உள்ளதொரு தனி ஆசிரம கட்டிடம் தேவையென கருதி, புதிய கட்டிடம் கட்டப்பட்டு, ஆசீர்வாத நிகழ்வானது 2025 மே 5, மாலை 5:00 மணிக்கு நடைபெற்றது. மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் பேரருட்தந்தை. ஜோஸ் முட்டத்துப்பாடம் மற்றும் பேரருட்தந்தை. ஜோஷி குளத்துங்கல் ஆகியோர் இணைந்து திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டது.

### குருத்துவ அருட்பொழிவு

2025 மே 3, கடுத்துருத்தியில் உள்ள புனித மரியாள் மறைவட்ட ஆலயத்தில், உயர்திருதொண்டர் ஆகஸ்டின் (அனூப்) தடப்பள்ளி அவர்கள் தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருநிகழ்வுகளில் குருத்துவ அருட்பொழிவு செய்யபட்டார்.

### திருவுடை பெறுதல்

மாறப்பாடி புனித தோமையர் ஆலயத்தின், ஆன்மீக வளர்ச்சியின் படிக்கல்லாக, 2025 மே 08, மதியம் 2:00 மணியளவில் அருட்சகோதரி இவாரை கிறிஸ் CMC, அவர்கள் தக்கலை மறைமாவட்ட ஆயர், மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருநிகழ்வுகளில் திருவுடை பெற்றுக்கொண்டு, முதல் வார்த்தைப்பாட்டை ஏற்றுக்கொண்டார்.

# மறைவட்டச் செய்திகள்

## மஞ்சாலுமூடு

### ▶ புனித குழந்தை தெரசா ஆலயம் மஞ்சாலுமூடு


மே 01, பள்ளிக்கூடங்களில் 8 முதல் 12 -ம் வகுப்புகளில் படிக்கும் பிள்ளைகளுக்கு மறைவட்ட அளவில் வாழ்க்கை வழிகாட்டி முகாம் நடத்தப்பட்டது. மே மாதம் முழுவதும் குருதியில் கொண்டாடும் மே வணக்கம் 8 -ஆவது ஆண்டாக இந்த மாதமும் கொண்டாடப்பட்டு வருகிறது. மாலையில் திருப்பலிக்குப் பின் குருசடியில் ஜெபமாலை மறையுரை சிறப்பு ஜெபம் சிற்றுண்டி என எல்லா தினங்களிலும் நடைபெற்று வருகிறது. மே 03, திருத்தொண்டர் அனூப் -ன் குருப்பட்டம் கருத்துருத்தியில் வைத்து நடைபெற்றது. இவ்விழாவில் 34 பேர் சென்று கலந்து கொண்டோம். மே 04, தெற்றிவிளை புனித மிக்கேல் ஆலய அர்சிப்பில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தோம். மே 05, தொடங்கி VPV ஒருவாரம் நடைபெற்றது. 13 ஆம் தேதி சுற்றுலா சென்று வந்தோம். மே 14, பேரருள்தந்தை அகஸ்டின் தலோடில் பாலா மறைமாவட்டத்தில் பணியாற்ற சென்றார். சிறப்பான வழியனுப்புதல் நடைபெற்றது. அன்றைய தினம் SDS காண்வென்ட் அருள்கன்னியர் ஹெலனா அவர்கள் (81 வயது) மரணமடைந்தார். SDS காண்வென்டில் நல்லடக்கம் நடைபெற்றது. மே 18, அருட்தந்தை அனூப் குரு பட்டம் பெற்ற பின் மஞ்சாலுமூடு பங்கில் முதல் முறையாக திருப்பலி அர்பித்தார். பங்கு மக்கள் சார்பில் ரூபாய் 23000 அன்பளிப்பாக வழங்கப்பட்டது. தொடர்ந்து பேரருள்தந்தை மார்ட்டின் கண்டம்பறம்பில் அவர்களுக்கு பிரிவு உபசாரம் நடைபெற்றது. இயக்கங்கள் சார்பாக பரிசுகளும் பங்கு மக்கள் சார்பில் ரூபாய் 20000 மதிப்புள்ள செல்போன்-ம் வழங்கப்பட்டது.மே 24, புதிய பங்கு தந்தையாக பேரருள்தந்தை டோஜி பறம்பில் பறம்பில் பொறுப்பேற்றார். மே 25, முன்னாள் பங்கு தந்தை மார்ட்டின் கண்டம்பறம்பில் அவர்கள் பாலா மறைமாவட்டத்தில் பணிமாற்றம் பெற்று சென்ற போது பங்கு மக்கள் சென்று வழி அனுப்பி வந்தனர். மே 31, ஒரு மாதம் நடைபெற்ற மே வணக்கம் ஜெபமாலை பவனியுடன் முடிவடைந்தது.

### ▶ புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் தெற்றிவிளை

மே 4 ஆம் தேதி தெற்றிவிளை புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் அர்ச்சிப்பு விழா மிகவும் சிறப்பாக மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களால் பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்கள் முன்னிலையில் அர்ச்சிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து 8 நாள் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

# தக்கலை – பிலாங்காலை

## ▶ புனித சவேரியார் ஆலயம் கைசாலவிளை




மே 02 விசுவாச பயிற்சி விழா நிறைவுற்றது. 3 ம் தேதி பங்குதந்தை தலைமையில் சுற்றுலா நடைபெற்றது. ஒவ்வொரு வாரமும் புதன் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களில் மாலையில் ஜெபமாலை மற்றும் திருப்பலி நடைபெறுகிறது. மாதத்தின் 3 வது ஞாயிற்றுக்கிழமை 3 உறவிய ங்களில் கூட்டம் நடைபெறுகிறது.

## ▶ புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை

மே 1, மாதாவின் வணக்க மாதத்தை முன்னிட்டு காலையில் 6.10 மணிக்கு ஜெபமாலை, தொடர்ந்து திருப்பலி நடைபெற்றது. 3 ம் தேதி விசுவாச பயிற்சி நிறைவு விழா பவனி மற்றும் குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. 4 ம் தேதி தவக்காலத்தில் ஆலயத்தில் திருப்பலிக்கு தவறாமல் வருகை புரிந்தவர்களுக்கு பங்குதந்தை பரிசுகள் வழங்கினார். அருட்சகோதரிகள் இருவருக்கு பிரியாவிடை நிகழ்வும் நடைபெற்றது. கீ போர்டு வகுப்புகளின் துவக்க விழா நிகழ்வு நடைபெற்றது. 10 ம் தேதி நோயாளிகளுக்கான திருப்பலி, ஆராதனை, தைலம் பூசுதல் நிகழ்வு மற்றும் நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது. அன்னையர் தினத்தை முன்னிட்டு அனைவருக்கும் பூ கொடுத்து வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. 11 ம் தேதி ஆலயத்தில் புதிதாக வந்த அருட்சகோதரிகளுக்கு பூங்கொத்து கொடுத்து வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. 17 ம் தேதி கிறிஸ்து யூபிலி வருடத்தை முன்னிட்டு திருவவிலியம் முழுவதுமாக எழுத துவங்கப்பட்டது. 18 ம் தேதி எம் முன்னாள் பங்குதந்தை பேரருட்தந்தை பால் தாமரச்சேரி வருகை தந்து ஆலயத்தை பார்வையிட்டு அங்கு

இருந்த மக்களை சந்தித்து பேசினார். 24 ம் தேதி இளைஞர்கள் சார்பில் அருட்சகோதரிகள் இல்லத்தில் வைத்து ஜெபமாலை சொல்லப்பட்டது. 31 ம் தேதி மாதாவின் வணக்க மாதமான கடைசி நாளன்று மாலை 6 மணிக்கு திருப்பலி தொடர்ந்து ஜெபமாலை பவனி நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது. முதல் 3 ஞாயிற்றுக்கிழமைகளிலும் 7 உறவியங்களின் உறவியக் கூட்டங்கள் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் அந்த வாரம் முழுவதும் பிறந்தநாள் மற்றும் திருமண நாள் கொண்டாடுபவர்களுக்காக திருப்பலியில் ஜெபித்து திருப்பலி முடிந்த உடன் பங்குதந்தையால் பூ கொடுத்து அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்படுகிறது.

**புனித அன்னை தெரசா ஆலயம் கல்லுவிளை**



கல்லுவிளை ஆலயத்தில் பணியாற்றிய அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில் மாற்றலாகி சென்றார். புதிய பங்குதந்தையாக அருட்தந்தை ஆன்றனி மகேஷ் பொறுப்பேற்றார். குருகுல முதல்வர் தந்தை அவர்கள் பங்குதந்தைக்கு உரிய ஆயரின் ஆணையை அளித்து சிறப்பித்தார். அருட்தந்தை ஏற்கனவே பணியாற்றிய வாஞ்சிநகர் பங்கிலிருந்து மக்கள் வருகை தந்து அதில் கலந்து கொண்டனர். கல்லுவிளை பங்குமக்கள் கலந்து கொண்டு புதிய பங்குதந்தையை வரவேற்று வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

**புனித சூசையப்பர் ஆலயம் தடிக்காரன்கோணம்**

மே 24 ம் தேதி அருட்தந்தை குரியன் தடிக்காரன்கோணம் பங்கிலிருந்து



மாற்றலாகி ஆனையடி புனித ஜார்ஜியார் ஆலயம் சென்றார். தடிக்காரன்கோணம் மற்றும் வெள்ளாம்பி பங்கின் பங்குதந்தையாக அருட்தந்தை பிரின்ஸ் பொறுப்பேற்றார். அருட்தந்தை சுபின், அருட்தந்தை டென்சி, அருட்தந்தைகுரியன், அருட்சகோதரிகள் மற்றும் பங்குமக்கள் புதிய பங்குதந்தையை வரவேற்றனர்.

### ▶ கிறிஸ்து அரசர் ஆலயம் பரைக்கோடு

மே 01 ஆம் தேதி விசுவாச பயிற்சி விழா தொடங்கியது. 4 ஆம் தேதி விசுவாச பயிற்சி விழாவை முன்னிட்டு கன்னியாகுமரிக்கு சுற்றுலா சென்றனர். 10 ஆம் தேதி அருட்சகோதரி ஜோதிஸ் அவர்களுக்கு பிரியாவிடை அளிக்கப்பட்டது. மாதர் ஜோதிஷ் இயக்க தலைவர்கள் மற்றும் அருட்சகோதரிகள் பரணிங்நானம் அல்போன்சா ஆலயம் சென்றனர். ஆலயத்தின் முன் புனித அந்தோணியார் குருசடி அர்ச்சிக்கப்பட்டது. 24 ஆம் தேதி பங்குதந்தை அருட்தந்தை ஜோண்சிலால் மாற்றலாகி, புதிய பங்குதந்தையாக அருட்தந்தை செபி அவர்கள் பொறுப்பேற்றார். பங்குமக்கள் வருகை தந்து அவரை வரவேற்றனர்.

## களியல்

### ▶ புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

காரோடு, புனித சூசையப்பர் ஆலயத்திருவிழா, 2025 ஏப்ரல் 30 மாலை 5.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. அன்றைய நாள் உறவியங்களிலிருந்து செபமாலை பவனியும் நடைபெற்றது. தொடர்ந்து திருக்கொடியேற்றுதல் நடைபெற்றது. பின்னர் அருட்பணி. ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் ஆடம்பரத்திருப்பலியும் அருட்பணி மிஜோ செபஸ்டின் தலைமையில் நற்செய்தி பெருவிழாவும் நடைபெற்றது. தொடர்ந்து 3 நாட்கள் ஆடம்பரத்திருப்பலி மற்றும் நற்செய்தி பகிர்வும், நான்காவது நாள் திருப்பலிக்கு பின் திருப்பவனியும் நடைபெற்றது. கடைசி நாளாகிய 04.05.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அருட்பணி. மார்ட்டின் கண்டம்பறம்பல் MST அவர்கள் தலைமையில் இராசைத்திருப்பலியும், அருட்பணி. அஜின் C ஜோசப் அவர்களால் இறைவார்த்தை பகிர்வும் நடைபெற்றது. தொடர்ந்து திருக்கொடியிறக்கப்பட்டது. மாலை 6.30 மணியளவில் மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் ஆண்டுவிழாவும் நடைபெற்றது. மறைக்கல்வி மாணவர்களுக்கான விசுவாச பயிற்சி விழா மே 05 முதல் 10 ஆம் தேதி வரை 6 நாட்கள் நடைபெற்றது. அருட்சகோதரர் டெபின் அவர்கள் நிகழ்வுகளை வழிநடத்தினார்.

காரோடு, புனித சூசையப்பர் ஆலயத்தின், ஆன்மீக வளர்ச்சியின் மற்றுமொரு மைல் கல்லாக , 2025 மே 13, செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் அருட்சகோதரி இவானா கிறிஸ் CMC அவர்கள் தக்கலை மறைமாவட்ட ஆயர், மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருநிகழ்வுகளில் திருவுடை பெற்றுக்கொண்டு, முதல் வார்த்தைப்பாட்டை ஏற்றுக்கொண்டார்.

# தூசைபுரம்

## பாத்திமா அன்னை ஆலயம் பாத்திமாபுரம்



மே 1 முதல் 5 வரை vpv வகுப்புகள் நடைபெற்றது. 7ஆம் தேதி ஆலயத் திருவிழாவானது கொடியேற்றத்துடன் தொடங்கியது. தொடர்ந்து 5 நாட்கள் திருவிழா நடைபெற்றது.

## தேவ மாதா ஆலயம் – கிள்ளியூர்

மே 18, பங்குத்தந்தை ஷாஜன் தலைமையில் 5 பிள்ளைகளுக்கு புது நன்மை மற்றும் உறுதிப்பூசுதல் வழங்கப்பட்டது. திருப்பலி முடிந்தவுடன் பங்கு தந்தை ஷாஜன் அவர்களுக்கு பிரிவு உபசார விழாவும் புதிதாக வருகை புரிந்த அருட்சகோதரிகளையும் வரவேற்றோம். மே 24, புதிதாக



அருட்தந்தை ஜோஸ் புரையிடகுந்நேல் அவர்கள் பொறுப்பேற்று, அருட்தந்தை ஷாஜன் அவர்கள் மாற்றம் பெற்று சென்றார்கள்.

## புனித தோமையார் ஆலயம் மாதாபுரம்

மே 18, திருப்பலி முடிந்தவுடன் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ், அருட்தந்தை லின்றோ ஆகியோரின் பிரிவு உபசாரவிழா நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டன.



மே 11, V P V ல் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. புதிதாக அருட்தந்தை ஜோஸ் புரையிடகுந்நேல் அவர்கள் பொறுப்பேற்று, இன்று புதிதாக பொறுப்பேற்க வருகை புரிந்த அவர்களை பங்கு மக்கள் வரவேற்றார்கள். எல்லா வியாழக்கிழமைகளில் திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் நடைபெற்றன.

- **புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை**

மே 04, V P V மிக சிறப்பான முறையில் முடிவடைந்தது. மே 10 VPV-ல் பங்கு பெற்ற மறைக்கல்வி மாணவர்கள், ஆசிரியர்கள் அருள்சகோதரிகள் மற்றும் அருட்தந்தையுடன் இணைந்து மூன்று திருத்தலங்களில் சென்று ஜெபித்து இறுதியில் கன்னியாகுமரி சென்று திரும்பினார். மே 11, திருப்பலி முடிந்தவுடன் அருட்தந்தை டோஜி அவர்களது தலைமையில்



திருப்பணியாளர்கள் கூட்டம் நடைப்பெற்றன. மே 25, திருப்பலி முடிந்தவுடன் அருட்தந்தை தலைமையில் மறைக்கல்வி ஆசிரியர்களின் கூட்டம் மற்றும் உறவிய பொறுப்பாளர்கள் தேர்தல் நடைபெற்றது.

## கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம்

2025 மே மாதம் முழுவதும் மாலை 5. 30 மணிக்கு மாதா கெபியில் மாதாவின் வணக்க மாதம் ஜெபமாலை நடைபெற்றது. நான்காம் தேதி வரை 8 நாட்கள் பங்கில் விசுவாச பயிற்சி விழா நடைபெற்றது. சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் பங்கேற்று பயன்பெற்றனர். பயிற்சியை அருட் சகோதரர் மெர்பின் வழி நடத்தினார். மே 5 ஆம் தேதி இன்பச் சுற்றுலாவும் நடைபெற்றது. ஆறாம் தேதி புதிய திருத்தந்தையை தேர்வு செய்ய சிறப்பு ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. 20 முதல் 22 வரை புனித அல்போன்சா கல்லூரியில் நடைபெற்ற பயிற்சி முகாமில் பங்கில் இருந்து திரளான பிள்ளைகள் பங்கேற்றனர். 13 ஆம் தேதி பங்கு திருப்பணியாளர்கள் முக்கூட்டுக்கல் இளம் குருமடம் பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டனர்.



மே 18 ஆம் தேதி பெற்றோருக்கான கூடுகையும் 21 ஆம் தேதி மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கூடுகையும் நடைபெற்றது. 21 ஆம் தேதி பங்குப் பேரவை கூடுகையும் 24 ஆம் தேதி பங்கு பொதுமன்றமும் நடைபெற்றது. பொது மன்றத்தில் புதிய கைகாரர்கள் தேர்தல் நடைபெற்றது. தேர்தலை பங்குத்தந்தை அருள் தந்தை அஜின் ஜோஸ் சிறப்புற நடத்தினார். பங்கில் பணியாற்றிய அருள் சகோதரி அமலா மற்றும் அருள்சகோதரி லின்ஸ் ஆகியோர் பணி மாறுதல் பெற்று சென்றனர். புதிதாக பணியாற்ற வருகை தந்த அருள் சகோதரி எல்ஸா மற்றும் அருள் சகோதரி றோஸி ஆகியோர் வரவேற்கப்பட்டனர்.

## புனித சூசையப்பர் மறைவட்ட தேவாலயம் சூசைபுரம்

மே 01, காலை அருட்தந்தை தோமஸ் தக்கலை அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருவிழா திருப்பலியில் 15 பிள்ளைகள் முதல் திருவிருந்தினை பெற்றுக் கொண்டனர். அன்று மாலை கிறிஸ்து யூபிலி ஆண்டு மற்றும் பங்கு குடும்ப விழாவினை முன்னிட்டு தக்கலை மறைமாவட்ட மக்களுக்கான சேர்ந்திசை போட்டியானது மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் பிலாங்காலை புனித குழந்தை தெரசாள் ஆலய குழுவினர் முதல் பரிசு ரூ.10000/- பெற்றுக் கொண்டனர். 02, ஆம் தேதி மாலை திருவிழா திருப்பலிக்கு பின்னர் பங்கு மக்கள் இணைந்து நடத்திய மெல்லிசை விருந்து நடைபெற்றது. 03, ஆம் தேதி காலை 10 மணிக்கு அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள்

தலைமையில் நடைபெற்ற ஆடம்பர திருப்பலியினை பங்கிலிருந்து வெளியூரில் திருமணமாகிச் சென்ற மகளிர் சிறப்பித்தனர். மாலை6.30 மணிக்கு தேர்ப்பவனி நடைபெற்றது. 04, ஆம் தேதி காலை 9:30 மணிக்கு பேரருட்தந்தை தோமஸ் சத்யநேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆடம்பர ராசை திருப்பலியிலும் பின்னர் நடைபெற்ற உறவின் விருந்திலும் பங்கு மக்களும் ஊர் பொதுமக்களும் பெருவாரியாக கலந்து கொண்டு இறை



ஆசீர் பெற்றுச் சென்றனர். மாலை 6 மணிக்கு மறைக்கல்வி ஆண்டுவிழா கலை நிகழ்வுகள் அருட்தந்தை ஜோஸ்மோன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவிழாவின் எல்லா நாட்களிலும் இரவு, உறவின் உணவு வழங்கப்பட்டது. 05, ஆம் தேதி இறந்தோரை நினைவு கூர்ந்து திருப்பலி மற்றும் ஒப்பீசு ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்றைய தினம் மதியம் 1.30 மணி முதல் V.P.V. வகுப்புகள் மிகுந்த உற்சாகத்துடன் தொடங்கப்பட்டு மே 10, மாலை சுற்றுலாவுடன் நிறைவுபெற்றது. 11, ஆம் தேதி மாலை 4.00 மணிக்கு மறைக்கல்வி ஆசிரியர்கள் கூட்டமும் 5.00 மணிக்கு பீடச்சிறுவர்கள் கூட்டமும் பங்குத்தந்தை பேரருட்தந்தை ஆண்டனி ஜோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றன. 12, ஆம் தேதி மறைவட்ட அளவிலான மறைக்கல்வி தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கூட்டம் மறைவட்ட மறைக்கல்வி இயக்குனர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் கிறிஸ்து யூபிலி ஆண்டை முன்னிட்டு மே 31, நடைபெற்ற மறைஆசிரியர்கள் மாநாட்டில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்வது குறித்து விவாதிக்கப்பட்டது. 18 ஆம் தேதி திருப்பலிக்கு பின்னர் அருட்தந்தை மேத்யூ தெக்கேகுற்று அவர்களுக்கு பங்கு மக்கள் சார்பில் பிரிவு உபசார விழா நடைபெற்றது. மே 20 முதல்

22 வரை புனித அல்போன்சா கல்லூரியில் வைத்து நடைபெற்ற மறைக்கல்வி மாணவர்களுக்கான முகாமில் பங்கிலிருந்து 7 மாணவர்கள் கலந்து கொண்டனர். 24ஆம் தேதி காலை திருப்பலி முடிந்த பின்னர் அருட்தந்தை மைக்கேல் ஆரோக்கியசாமி Sdb மற்றும் பங்குத்தந்தை பேரருள்தந்தை ஆன்றனிஜோஸ் ஆகியோருக்கு பங்கு மக்கள் சார்பில் பிரியாவிடை நடத்தப்பட்டது. அப்போது பங்கின் 65 - வது ஆண்டினை முன்னிட்டு 'மாணிக்க மலர்' எனும் சூசையான் குடும்பமலர் - 2 முன்னோட்டமாக வெளியிடப்பட்டது. பின்னர் பங்குத்தந்தையோடு சேர்ந்து அனைவரும் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். காலை 10.30 மணிக்கு அருட்தந்தை மேத்யூ தெக்கேகுற்று அவர்களை பங்கு தந்தையரும் பங்கு மக்களும் சேர்ந்து முக்கூட்டுக்கல் இளங்குரு மடத்தில் கொண்டு போய் சேர்த்தனர். அன்று பிற்பகல் 2:30 மணிக்கு புதிய பங்குத் தந்தையாக பேரருள் தந்தை ஜோன்சிலால் அவர்களும் மாலை 4:30 மணிக்கு ஏபிஜேஎம் பள்ளி முதல்வர் மற்றும் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தாளாளராக பேரருள்தந்தை எபின் பூவத்துமூட்டில் அவர்களும் வருகை தந்தார்கள். அவர்களை பங்கு மக்கள் சேர்ந்து வரவேற்றனர். 25 ஆம் தேதி புதிய பங்குத்தந்தையின் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. 31 ஆம் தேதி கல்லுவிளை ஆசீர் அரங்கில் வைத்து நடைபெற்ற மறை ஆசிரியர்களின் மாநாட்டில் நடைபெற்ற போட்டியில் எமது மறைவட்ட ஆசிரியர்கள் குருத்துவம் எனும் அருட்சாதனத்தை காணொளி காட்சி மூலம் விளக்கினார்கள்.

## படந்தாலுமூடு

### ▶ திரு இருதய மறைவட்ட ஆலயம் படந்தாலுமூடு

ஏப்ரல் 29 முதல் மே 03, வரை விசுவாச பயிற்சி விழா நடைபெற்றது. இதனை அருட்சகோதரர் ஸ்ரீஜித் அவர்கள் வழி நடத்தினார்கள். மே 03, டீக்கன் அனுப் அவர்களின் குருத்துவ அருட்பொழிவிற்கு பங்கு மக்கள் சார்பாக சுமார் 20 பேர் கலந்து கொண்டார்கள். 17 ஆம் தேதி மறைக்கல்வி மாணவர்களுக்கான ஒரு நாள் சுற்றுலா நடைபெற்றது. 18ஆம் தேதி திருப்பலிக்குப் பின் அருட்தந்தை ஜோஸ் புரையிடத்துக்குந்நேல் அவர்களுக்கு பிரிவு உபசார விழா நடைபெற்றது. தொடர்ந்து திருவிழா ஆலோசனைக் குழு கூட்டம் நடைபெற்று, திருவிழா குறித்து ஆலோசித்து முடிவுகள் எடுக்கப்பட்டன. மாதாவின் வணக்கம் மாதத்தை முன்னிட்டு மே 19 முதல் 24 வரை மாலை 6 மணிக்கு திருப்பலியும் அதை தொடர்ந்து ஜெபமாலையும் நடைபெற்றது. அன்றைய தினம் அருட்தந்தை

ஜோஸ்மோன் புரையிடத்துக்குந்நேல் அவர்கள் மாறுதலாகி கிள்ளியூர் தேவமாதா ஆலயத்திற்கு ஆலய மக்களால் வழி அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

### ▶ மார்ட்டின் டி போரஸ் ஆலயம் கழுவன் திட்டை

மே 05 முதல் 11 வரை விசுவாச பயிற்சி விழா நடைபெற்றது. மேலும் VPV மாணவர்களுக்கான ஒரு நாள் சுற்றுலாவும் நடைபெற்றது. 24ஆம் தேதி பங்கு தந்தை ஜஸ்டின் செறுவேலில் அவர்கள் மாறுதலாகி நித்திரவிளை ஜெய மாதா ஆலயத்திற்கு சென்றார்கள். 24 ஆம் தேதி மாலை 4 மணிக்கு புதிய பங்கு தந்தையாக அருட்தந்தை ஜோமி கமுகமற்றத்தில் அவர்கள் பொறுப்பேற்றார்கள்.

### ▶ புனித வின்சென்ட் தே பவுல் ஆலயம் மார்த்தாண்டம்

மே 11, திருப்பலிக்குப்பின் துணை பங்கு தந்தை அருட்தந்தை ஜோஸ்மோன் புரையிடத்துக்குந்நேல் அவர்களுக்கு பிரிவு உபசார விழா நடைபெற்றது. 18ஆம் தேதி பங்கு தந்தை பேரருட்தந்தை தோமஸ் சத்திய நேசன் அவர்களுக்கு பிரிவு உபசார விழா நடைபெற்றது. மேலும் அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்கள் புதிய பங்கு தந்தையாக பொறுப்பேற்றார்கள்.

### ▶ புனித பவுல் ஆலயம் தெற்றியோடு

மே 04, மறைக்கல்வி மாணவர்களுக்கான சுற்றுலாவும், 6 ஆம் தேதி மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான சுற்றுலாவும் நடைபெற்றது. 25 ஆம் தேதி புதிய கைக்காரர்கள் பொறுப்பேற்றார்கள்.

## நித்திரவிளை

### ▶ புனித சவேரியார் ஆலயம் – வாறுதட்டு

மே 4, மாலை 6.00 மணிக்கு உறவிய ஆண்டுவிழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொது கூட்டத்தின் இடையிடையே உறவிய மக்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 21ஆம் தேதி பணியிடமாறுதலாகி சென்ற பங்குதந்தை ஜோசப் சந்தோஷ் மற்றும் துணைப் பங்குதந்தை லிண்டோ ஆகிய இரண்டு அருட்தந்தையர்களுக்கும் பிரியாவிடை வாழ்த்துக்கூட்டம் நடைபெற்றது. 24ஆம் தேதி மாலை 5.00 மணிக்கு அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் மற்றும் அருட்தந்தை லிண்டோ அவர்கள் நன்றியின் திருப்பலியினை நிறைவேற்றினார்கள். திருப்பலியைத் தொடர்ந்து புதிய பங்குத்தந்தை அருட்தந்தை ஷிஜோ அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. 31 ஆம் தேதி காலை 9.30 மணிக்கு கல்லுவிளையில் வைத்து மறை ஆசிரியர்களுக்கான யூபிலி கொண்டாட்டமும், குழந்தை ஈசோ இயக்கம் மற்றும் மறைக்கல்வி இயக்கத்தின் இவ்வாண்டைய துவக்கவிழாவும் நடைபெற்றது. இந்நிகழ்வில் எம் பங்கின் மறைக்கல்வி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# தென்காசி மறைத்தள செய்திகள்

## கருத்தரங்கு



விடுமுறை காலத்தில் மாணவ மாணவிகளை உற்சாகமூட்டும் அளவில் சுந்தர பாண்டிய புரத்தில் உள்ள குழந்தைகளுக்காக சிறப்பான கருத்தரங்கம் மே 21 ஆம் தேதி சுந்தரபாண்டியபுரம் மறைத்தளத்தில் வைத்து நடத்தப்பட்டது. அதில் ஜாதி மத வேறுபாடின்றி அனைத்து குழந்தைகளுக்கும் விளையாட்டுகள் இறை சிந்தனைகள் மற்றும் கருத்தரங்குகள் வழங்கப்பட்டது. இதில் மாணவர்கள் மிக உற்சாகமாக பங்கெடுத்தனர். அருட்தந்தை ஜான் ஜோசப் அவர்கள் இதனை வழிநடத்தினார்.

## விசுவாச பயிற்சி விழா

புளியரை மற்றும் புதூர் ஆகிய பங்குகளை ஒன்றிணைத்து மே மாதம் 5 ஆம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை விசுவாச பயிற்சி விழாவானது புதூர் புலரி மெட்ரிகுலேஷன் பள்ளிக்கூடத்தில் வைத்து சிறப்பாக நடத்தப்பட்டது. 40க்கு மேற்பட்ட குழந்தைகள் இதில் பங்கெடுத்து பயனடைந்தனர். அருட்சகோதரர் பிபின் அவர்கள் இதனை வழிநடத்தினார். இறுதியில் அருட்தந்தை டென்சி முண்டு நடைய்க்கல் அவர்கள் அனைவருக்கும் பரிசுகளை வழங்கினார். வாஞ்சி நகர், மேக்கரை ஆலயம் மற்றும் சுந்தரபாண்டியபுரம் மறைத்தளத்தில் உள்ள மாணவ மாணவிகளை ஒன்றிணைத்து வாஞ்சி நகர் ஆலயத்தில் வைத்து விசுவாச பயிற்சி விழா மே 6 முதல் 10 வரை நடத்தப்பட்டு இறுதியில் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது அருட்சகோதரர் ஜோஸ் அவர்கள் இதனைவழிநடத்தினார்கள்.

## பணி மாற்ற விழா

வாஞ்சி நகர் பங்கு தந்தையாக செயல்பட்டு வந்த அருட்தந்தை ஆண்டனி

மகேஷ் அவர்கள் பணி மாற்றம் பெற்று செல்வதால் அவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு மிகச் சிறப்பாக வாஞ்சி நகர் ஆலயத்தில் வைத்து சிறப்பிக்கப்பட்டது. புலரி சமூக சேவை மையத்தின் இயக்குனராக அருட்தந்தை ஆண்றணி மகேஷ் அவர்கள் பணி மாற்றம் பெற்று செல்வதால் அவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு மே 22 ஆம் தேதி புலரி சமூக சேவை மையத்தில் வைத்து நடத்தப்பட்டது. அதில் சமூக சேவை மையத்தில் உள்ள பொறுப்பாளர்கள் மற்றும் அருள் சகோதரிகள் கலந்துகொண்டு அருட்தந்தை அவர்களுக்கு நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தோடு பரிசுகளையும் வழங்கினார்.

**வரவேற்பு**



புளியரை ஆலயத்தின் துணை பங்கு தந்தையாக அருட்தந்தை அமன்றோ அவர்கள் வருகை தந்தார்கள். அவர்களை புளியரை பங்கு மக்கள் சார்பாக அருட்தந்தை மற்றும் அருள்கன்னியர்கள் இணைந்து வரவேற்பு கொடுத்தனர். பிலாங்கரை பங்கு மக்கள் இணைந்து அருட்தந்தை அமன்றோ அவர்களை புளியரை ஆலயத்தில் வழி அனுப்பி விட்டு சென்றனர். தென்காசி மறைத்தளத்தின் புதிய ஒருங்கிணைப்பாளராக அருட்தந்தை சுமேஷ் அவர்கள் மே மாதம் 23 ஆம் தேதி வருகை தந்தார்கள். மறைத்தளத்தின் சார்பாக அருட்தந்தையர்கள் வாஞ்சிநகர் ஆலய மக்கள் ஒன்றிணைந்து அருட்தந்தை சுமேஷ் அவர்களை வரவேற்றனர். தக்கலை மறை மாவட்டத்தில் இருந்து மறைமாவட்ட ஆவண காப்பாளர் அருட்தந்தை ஜோஸி குளத்தும்கல் அவர்கள் வருகை தந்து புதியதாக பொறுப்பேற்ற அருட்தந்தை சுமேஷ் அவர்களுக்கு பொறுப்புகளை கொடுத்ததோடு வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா**

## MONTHLY AGENDA – JUNE 2025

| DATE | DAY | EVENTS |
|---|---|---|
| 1 | Sun | CAT: Inaugural ceremony of New Catechetical Academic year 2025-2026<br>CML: Inauguration ff Activity Year in Units; Election of new Office-bearers in Units<br>KKSSS: Gatekeeping Programme for Parish Council and Pious Association leaders at Christurajapuram<br>LC: Central Council Meeting at Kalluvilai<br>SMYM: Manjalumoodu Forane Unit visit<br>SVP: CC Meeting<br>STI: Inauguration of New Academic Year |
| 3 | Tue | SINAI: Intercessory Prayer |
| 5 | Thu | Orientation Program for New Priests in the Diocese<br>KKSSS: SHG World Environmental day Celebration at Kalluvilai |
| 6 | Fri | VC: Adoration for Vocation (Arukani Forane)<br>SINAI: Retreat at Vattakottai |
| 7 | Sat | CAT: Forane Directors Meet at Kalluvilai<br>KKSSS: Educare Class<br>SMYM: Central team & forane executive training<br>MJ: Retreat |
| 8 | Sun | LC: Forane Leaders Meeting<br>SMYM: Manjalumoodu Forane Unit visit & Forane Gathering<br>URM: Thuckalay Pilankalai Leaders Meeting<br>SVP: AC Meeting<br>MJ: Director's visit to Kaisalavilai Parish |

| | | |
|---|---|---|
| 9 | Mon | EIRD: Kanyakumari United Christian Council Meeting |
| 10 | Tue | SINAI: Intercessory Prayer |
| 12 | Thu | ET: Mission Meet |
| 13 | Fri | Moolamattom Palliative Care Blessing<br>SMYM: Youth Camp<br>FA: Marriage Preparation Course |
| 14 | Sat | SINAI: Evening Retreat at Malaicode<br>SMYM: Youth Camp<br>FA: Marriage Preparation Course<br>MJ: Widows Meet<br>CRI: Jubilee of the Religious |
| 15 | Sun | KKSSS: Gatekeeping Programme for Parish Council and Pious Association leaders at Mankarai<br>SMYM: Youth Camp<br>FA: Marriage Preparation Course |
| 16 | Mon | EIRD: Regional United Christian Council Meeting |
| 17 | Tue | Priests’ Conference |
| 18 | Wed | Meeting with Special school principals @ Bishop’s House |
| 19 | Thu | Meeting with Cathedral Committee @ Bishop’s House |
| 20 | Fri | Meeting New Departmental Directors @ Bishop’s House<br>SINAI: Evening Retreat at Palappallam |

| | | |
|---|---|---|
| 21 | Sat | CAT: Promoters Meet at Kalluvilai<br>HC: Bedridden patients and Bystanders meet at Vayalinkarai<br>MJ: Awareness programme |
| 22 | Sun | CAT: Re-examination for Classes X, XII at Padanthalumoodu<br>CML: International Executive Committee Meeting<br>KII: Jubilee 2025 forane level competition<br>URM: Retreat for Manjalumoodu, Kaliyal & Arukani Forane Leaders at Kalluviali<br>MJ: Director's visit to Nithiravilai Parish |
| 24 | Thu | SINAI: Intercessory Prayer |
| 26 | Thu | KII: Forane level monthly activity<br>KKSSS: PRI Meeting at Manjalumoodu |
| 28 | Sat | TENKASI : Mission meet<br>SINAI: One day Retreat at Kalluvilai<br>ASc: Drug Awareness Rally (H.Sc)<br>SMMS: Academic Year Inauguration |
| 29 | Sun | Animation Programme for Kaikars & Accountants @ Sangamam<br>CAT: Basic training Programme for Catechists: Class I at Padanthalumoodu (Batch:VIII)<br>CML: Annual General Body Meeting<br>SMYM: Central Team Mission Visit |
| 30 | Mon | Inter Diocesan Meet @ Sangamam |

FR.THOMAS POWATHUPARAMPIL, PROTOSYNCELLUS

## BISHOP'S ENGAGEMENTS - JUNE 2025

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 5 | Thu | 10.00 am<br>05.00 pm | Bishop's House: Orientation Programme for New Shepherds in the Diocese<br>Malaicode: Convent Chapel Blessing |
| 6 | Fri | 09.30 am<br>02.30 pm | Bishop's House: Curia Meeting<br>Bishop's House: Meeting with Seminary Staffs |
| 7 | Sat | 10.00 am | Bishop's House: Meeting priests |
| 8 | Sun | 08.00 am | Vayalinkarai: Holy Communion |
| 9 | Mon | 02.00 pm | Kottar: UCC Meeting >> Rameshwaram |
| 10 | Tue | | Rameshwaram: Mission Visit >> Madhurai |
| 11 | Wed | | Madhurai: Mission Visit |
| 12 | Thu | 01.00 pm | Madurai: Jubilee of Missionaries >> Moolamattom |
| 13 | Fri | 05.00 pm | Moolamattom: Paliative Care Blessing |
| 14 | Sat | 02.00 pm | Kalluvilai: Jubilee of Religious |
| 15 | Sun | | Bishop's House |
| 16 | Mon | 04.00 pm | Mukkoottukal: Seminary Academic Inauguration |
| 17 | Tue | 09.30 am | Sangamam: Priests' Conference |

| | | | |
|---|---|---|---|
| 18 | Wed | 09.30 am | Bishop’s House: Meeting with Special school principals |
| 19 | Thu | 10.00 am | Bishop’s House: Meeting with Cathedral Committee |
| 20 | Fri | 10.00 am | Bishop’s House: Meeting New Departmental Directors |
| 21 | Sat | 10.00 am | Soosaipuram: College GB Meeting |
| 22 | Sun | 09.00 am<br>02.00 pm | Padanthalummoodu : Feast Day Qurbana Kalluvilai : Jubilee of Children (KII) |
| 23 | Mon | 10.00 am | Changanaserry: visiting priests’ Homes |
| 24 | Tue | 10.00 am | Changanaserry: visiting priests’ Homes |
| 25 | Wed | 10.00 am | Changanaserry: visiting priests’ Homes >> Thuckalay |
| 26 | Thu | 09.30 am | Bishop’s House: Curia Meeting |
| 27 | Fri | 06.00 pm | Kattathurai: Kurissadi Blessing and new priests’ day |
| 28 | Sat | 05.00 pm | Tenkasi: Mission Meet |
| 29 | Sun | 10.00 am<br>05.00 pm | Sangamam: Animation Programme for Kaikars & Accountants<br>Pallikonam: Golden Jubilee Celebration |
| 30 | Mon | 10.00 am<br>06.00 pm | Sangamam: Inter Diocesan Meet<br>Killiyoor: Requiem Mass |

**FR. LIJU MATHEW, BISHOP'S SECRETARY**




First Profession of Sr.Evana Chris CMC at Karode




First Profession of Sr.S.Jeniba SH at Marappady




Raza Qurbana at Munchirai



Priestly Ordination of Dn. Anoop Thathappallil
3rd **May 2025**



For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay Published by: Media Department of the Diocese of Thuckalay, Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175 Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570